(சில உறுப்பினர்கள் கை உயர்த்தினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வாசுதேவநல்லூர் பகுதியைப் பற்றிய கேள்வி.

கூடுதாளைக்கு சாலை வசதி.

*வினா எண் 280—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதியில் உள்ள கூடுதாளையை குமரி-திருச்செந்தூர் சாலையுடன் இணைப்பது குறித்த திட்டம் மீனளத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. யா. சை. மு. யூசுப்: தலைவரவர்களே, இந்த கூடுதாளை சாலை எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் செய்த நேரத்தில் நேரில் கண்டு வந்து இருக்கிறார்கள். ஆகவே, அதை கவனத்தில் கொண்டு அந்தச் சாலையை மீனவர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு செப்பனிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, இந்தச் சாலை கன்னியாகுமரி-ராமேஸ்வரம் சாலையின் இணைப்புச் சாலையாகும். ஏற்கனவே 1·5 கிலோ மீட்டர் தொலைவு நீளம் அந்தச் சாலை தார் சாலையாக அமைந்து இருக்கிறது என்றாலும் அது மிகவும் பழுதடைந்து இருப்பதை நானும் அறிவேன். என்றாலும், தமிழ்நாடு முழுவதும் இருக்கிற கடலோரப் பகுதியில் இருக்கும் மீனவர்கள் வசிக்கும் கிராமங்களுக்கு குடிநீர் வசதி, எந்தெந்தப் பகுதியில் இருக்கிறது, எந்த எந்தப் பகுதியில் இல்லை, சாலை வசதி எந்தெந்தப் பகுதியில் இருக்கிறது, எந்தெந்தப் பகுதியில் இல்லை என்பதைப் பற்றிய தகவல்களை இந்த அரசு சேகரித்துக்கொண்டு வருகிறது. அந்தப் புள்ளிவிவரங்கள் கிடைத்தவுடன், அதற்கென தனியாக திட்டம் தீட்டி, அந்தக் கிராமங்களுக்குப் போதுமான

குடிநீர் வசதி, சாலை வசதி செய்து கொடுக்க அரசு முனைந்து செயல்பட இருக்கிறது. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் போது நிச்சயமாக அந்தக் கிராமமும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

மலைப்பகுதியில் உள்ள அரிசி ஆலைகள்.

*வினா எண் 281. திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோடைக்கானல், ஊட்டி போன்ற மலைப்பகுதிகளிலுள்ள கூலிக்கு அரைக்கும் அரிசி ஆலைகளில் 'ஷெல்லர் டைப்' அரவை முறைக்கு விலக்களிக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள பிற மாநிலங்களில், குறிப்பாக அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் இதுபோன்ற 'ஷெல்லர் டைப்' அரவை முறைக்கு விலக்களித்து இருக்கிறது. அதேபோல் நம்முடைய அரசும் விலக்களிக்க மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் ஷெல்லர் பொருத்துவதில் இருந்து விதிவிலக்கு அளித்து இருப்பதாக இந்த அரசுக்கு தகவல் கிடைக்கவில்லை. அந்த ஷெல்லர் டைப்புகளை பொருத்துவதற்கான காலகெடுவைத்தான் மத்திய அரசு நீட்டித்துக் கொடுத்து இருப்பதாகத் தகவல் கிடைத்து இருக்கிறது என்றாலும், அதற்கான விவரங்களைச் சேகரித்து மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவிப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, தமிழகத்தில் உள்ள பல அரசு ஆலைகளில் ஷெல்லர் டைப் போட வேண்டும் என்று தற்போது மாவட்டங்களில் இருக்கும் டி. எஸ். ஓ.க்களால் வற்புறுத்தப்படுகிறது. அப்படி ஏதேனும் ஆணையை அரசு பிறப்பித்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஆணை எதுவும் இந்த அரசு பிறப்பிக்கவில்லை. அந்த ஆணை மத்திய அரசாலே பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.